# மாத்தறை பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜுலை 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து மாத்தறை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 200,000 தொகைக்கான 28 பர்சஸ் காணியின் பெறுமதியினை நிலையான சொத்துக்கள் என மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கடன் அடிப்படையில் பெற்றிருந்த சேவைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 325,520 இற்கான செலவினங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது சபையினால் கடன் அடிப்படையில் பெற்றிருந்த இயந்திரப் பொறிகள் மற்றும் உபகரணங்களின் ரூபா 922,248 தொகையான பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) வாகனங்களின் பெறுமதி ரூபா 4,339,998 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 123,334,042 தொகைக்கான ஏனைய வருமான நிலுவையில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 58,660,164 இற்கான மீதிகள் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 65,392,763 இற்கான மூலதனக் கடன்கொடுத்தோர் மீதியில் 2007 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 22,676,144 தொகைக்கான கடன் மீதிகள் உள்ளடங்கியிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 8,876,667 தொகைக்கான திருப்பி செலுத்தப்பட வேண்டிய பலவின வைப்பு மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 8,173,131 இற்கான மீதியொன்று உள்ளடங்கியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்படக் கூடிய துணை சேவையின் கீழ் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,942,225 தொகையான மீதி மாத்தறை நகர சபையினால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

கூட்டுத்தொகை ரூபா 35,840,382 தொகைக்கான நிலையான சொத்துக்கள், ரூபா 1,942,255 தொகைக்கான அறவிடப்படக் கூடிய துணைச் சேவைகள் மற்றும் ரூபா 14,390,859 இற்கான முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கங்கள் தொடர்பான அட்டவணைகளும், ரூபா 23,592,538 தொகைக்கான மூலதன உதவி நிலுவை மற்றும் ரூபா 7,931,031 தொகை வருமான உதவி தொடர்பான உதவி நிதிகள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகளும், கூட்டுத்தொகை ரூபா 5,115,076 தொகைக்கான நிலுவை நீர்ப்பட்டியல் தொடர்பான விரிவான அட்டவணைகளும், ரூபா 21,981,649 தொகைக்கான நிர்மாணவேலை கடன்பட்டோர் மற்றும் ரூபா 22,452,139 கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக அட்டவணைகள், கோவைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அக்கொடுக்கல் வாங்கல்களின் மற்றும் மீதிகளை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 396 இன் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்கான சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 601,508 தொகைக்கான 05 காசோலைகள் தொடர்பான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 34,464,557 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,096,340 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 10,368,217 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மொத்த மீண்டுவரும் வருமானத்தில் 59 சதவீதமான மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டைப் போலவே கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கணிசமான பெறுமதியினால் மீண்டுவரும் செலவுகள் அதிகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் போது நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரம் 1:2.1 தொகை என காட்டிய போதிலும் கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்து அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 58,660,164 இற்கான மீதிகள் காணப்பட்டமையால் அவ் விகிதாசாரத்தின் பிரகாரம் திரவத்தன்மை காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிருவாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.4.1 வீத வரி**

பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நிலுவை தவணைப் பணத்தினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் ஆண்டு இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 4,017,281 தொகை அளவு உயர்ந்த பெறுமதியினை பெற்றிருந்தது.

**2.4.2 வாடகை**

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வாடகை மீதி ரூபா 419,712 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,717,734 தொகைக்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 2,137,446 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,746,811 ஆகியிருந்தமையால் ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 400,635 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 5,000,000 தொகை மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 22,500,000 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சேர்க்கப்பட்டிருந்த 10 ஊழியர்களிடம் உரிய கடமைகளை பெற்றுக்கொள்ளாமல் சம்பளம் மற்றும் படி செலுத்துவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 4,023,336 தொகை செலவிடப்பட்டிருந்தமையால் பொது மக்கள் நலன்புரி மற்றும் சுகாதார விடயங்கள், பாதைகள் பராமரிப்பு விடயங்களில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் முத்திரை வரி ரூபா 44,017 தொகை பெறுமதி கூட்டிய வரி ரூபா 235,651 தொகை மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 45,338 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்திருக்கவில்லை.

(இ) இரண்டாம் மற்றும் ஆரம்ப தர 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் இரண்டாம் மற்றும் ஆரம்ப தர 08 பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த மிகை பதவியணியினர் முறைப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 19,349,568 தொகைக்கான கிரயத்தையுடைய 04 இயந்திரங்கள் மற்றும் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்திருக்காத பாதை தகர்க்கும் இயந்திரம் மற்றும் டபள் கப் வண்டி என்பன மீளாய்வாண்டின் போது ஆக்கபூர்வமான விடயங்களுக்கு ஈடுபடுத்தியிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு செலவு ரூபா 68,520,100 தொகைக்கான 38 வேலைகள் திட்டங்களை அமுல் நடத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 7,892,390 தொகை பெறுமதியான 11 நிர்மாண வேலைகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் திண்மக் கழிவுப்பொருள் 08 தொன்களில் 3.5 தொன்கள் அளவு சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்திய போதிலும் மீதியயான 4.5 தொகையினை அகற்றுவதற்கான முறையான நடைமுறையொன்றினை செயற்படுத்தியிருக்கவில்லை. இதனால் 2013 ஆண்டின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரச் சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவது நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முறைசாராத விதமாக குப்பைகள் அகற்றுவதன் காரணமாக சேதனப் பசளை நிலையத்திற்கு அண்மையிலுள்ள பிரதேச மக்களின் எதிர்ப்பின் காரணமாக 2016 ஜூன் 13 திகதி முதல் சேதனப் பசளை உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 1,114,493 இற்கான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை மத்திய நிலையம் அந்த நாள் முதல் செயற்படாது காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 06 செலவு விடயங்கள் ஏற்பாடுகள் போதாமையால் வேறு செலவு விடயங்களிலிருந்து ரூபா 1,095,000 இற்கான ஏற்பாடுகளை மாற்றிச் செலவு செய்தலும், 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 20,573,878 இற்கான சேமிப்புக்களும் காணப்படல் ஆகிய காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்கங் கொண்ட உள்ளூராட்சி புனர்நிர்மாண சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு